will be taken to expedite the Maduravoyal to Chennai Port elevated road project which was needlessly stalled.

50) The Government led by the former Hon'ble Chief Minister Kalaignar had initiated the work on the Chennai Metro rail Project in 2009. This Government will ensure speedy completion of the Metro Rail Project Phase II. We urge the Government of India to accord early approval for equity participation on 50:50 sharing basis as was done for Phase I. Feasibility studies for Mass Rapid Transit Systems for Madurai, Tiruchirappalli, Salem and Tirunelveli will be taken up.

51) This Government is also fully committed to modernize and ensure the efficient functioning of the bus transport system in the State. The Hon'ble Chief Minister has launched a scheme for free travel for women, persons with disabilities and transgenders in all ordinary town buses. This is a historic step which will promote greater participation of women in economic activity and increase the modal share of public transportation.

52) A Master Plan for fully realising Tamil Nadu's tourism potential will be unveiled in the current year. Heritage tourism will be given a boost by restoring and renovating old forts and palaces while retaining their originality.

53) Tamil Nadu's Hindu Religious and Charitable Endowment Act has been a model legislation for the entire country. This Government is committed to promote transparency and accountability in temple management. The assets, lands and properties of temples will be protected. A State Level Advisory Committee for all major Hindu temples will be constituted to enhance facilities for devotees, improve the maintenance of temples and to advise on related issues.

54) This Government will launch special initiatives to address all aspects of women's wellbeing, development and empowerment. The focus will be on enhancing women's health status including reproductive health care and screening against cancer. Safety of women from harassment in the work place, protection against cybercrime and prevention of domestic violence will be prioritized. To encourage greater work participation by women, working womens' hostels will be established in every district.

2021 ஜூன் 22]

போக்குவரத்து அமைப்புகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

51. மாநிலத்தின் பேருந்துப் போக்குவரத்து அமைப்பை நவீனமயமாக்குவதற்கும் திறம்பட செயல்படுத்துவதற்கும் இந்த அரசு உறுதியாக உள்ளது. பெண்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், திருநங்கைகளுக்கும் அனைத்து சாதாரண நகரப் பேருந்துகளிலும் கட்டணமில்லா பயணத்திற்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் மூலம் பொருளாதாரச் செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பும், பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரின் பங்கும் அதிகரிக்கும்.

52. தமிழ்நாட்டின் சுற்றுலாத் திறனை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், ஒரு பெருந்திட்டம் நடப்பாண்டில் வெளியிடப்படும். பழங்காலக் கோட்டைகளும் அரண்மனைகளும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, பாரம்பரியச் சுற்றுலா ஊக்குவிக்கப்படும்.

53. தமிழ்நாட்டின் இந்து சமய மற்றும் அறக்கட்டளைச் சட்டம் நம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரி சட்டமாக விளங்குகிறது. கோயில்களின் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் முன்னிறுத்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. கோயில்களின் நிதி, நிலங்கள் மற்றும் சொத்துகள் பாதுகாக்கப்படும். அனைத்து முக்கிய இந்து கோயில்களிலும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும், கோயில்களின் பராமரிப்பை செம்மைப்படுத்துவதற்கும், பிற ஆலோசனைகளை வழங்குவதற்கும், மாநில அளவிலான ஓர் உயர்மட்ட ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்படும்.

54. பெண்களின் நல்வாழ்வு, மேம்பாடு மற்றும் முன்னேற்றம் தொடர்பான பல்வேறு சிறப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும். மகப்பேறு உடல் நலன் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக, பெண்களின் உடல்நலனை மேம்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தப்படும். பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் தடுப்பு, இணையவழிக் குற்றங்கள் மற்றும் குடும்ப வன்முறைகளிலிருந்து